# <u>In the Court of the District Munsif, Eraniel</u>

**Original Suit No. 61/2021** **Date:10.02.2026.**

**(CW1)-** பத்மகுமார்

நான் இரணியல் நீதிமன்றத்தில் பதிவு பெற்ற வழக்கறிஞராக பணியாற்றி வருகிறேன். இந்நீதிமன்ற அழைப்பானை கிடைத்தன் அடிப்படையில் தற்போது சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் இவ்வழக்கில் IA.NO. 3/2021 என்ற மனுவில் இந்நீதிமன்றத்தால் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளேன்

<u>**வாதி** தரப்பு விசாரணை</u>

1. எனது அறிக்கையில் சிவப்பு மற்றும் மஞ்சள் நிறத்தில் குறிப்பிடப்பட்டுளள பகுதி பி பட்டிகை சொத்து என்றால் சரிதான். அது மேற்கு பக்கத்தில் 2.6 மீ கிழக்கு 2.7 மீ அளவும் கொண்டுள்ளது என்றால் சரிதான். கிழக்கு பக்கத்தில் ஒர கேட் உள்ளது என்றாலும் அதை நான் குறிப்பிடவில்லை என்றாலும் எனது வரைபடத்தில் குறிப்பிடவில்லை ஆனால் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். மேற்படி பி பட்டிகை சொத்தில் தான் Sunshade மற்றும் பிரதிவாதி வீட்டிற்கு செல்லக்கூடிய படிகட்டும் அமைந்துள்ளது என்றால் சரிதான். சி பட்டிகை சொத்து காம்பவுண்ட் என்றாலும் எனது அறிக்கையில் தவறுதலாக அரசு புறம்போக்கு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் சரிதான், ஆனால் வரைபடத்தில் காம்பவுண்ட் சுவர் என்று குறிப்பிட்டுள்ளேன். பிரதிவாதியின் வீட்டின் கிழக்கு பக்க சுவர் மேற்படி வாதி காம்பவுண்ட் சுவரின் மேல் அமைந்துள்ளது என்றால் சரிதான்.புஷ்பா என்பவரின் வீடு பழைமையான வீடு என்றால் சரிதான்.

(ஒப்பம்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்.